JUDICIAL FORM NO.53
{See Rule-42}
DEPOSITION OF WITNESS
(CHATPTER XXIII CRPC).
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT, TENKASI.
Case No.சிசி.100/2020
PW.10

| | | | |
|---|---|---|---|
| பெயர் | திவான்சாகிப் | தாலுகா | சொக்கம்பட்டி |
| தந்தை பெயர் | அப்துல் ஹமீது | தொழில் | டிரைவர் |
| கிராமம் | திரிகூடபுரம் | வயது | 36 |

Solemnly affirmed in accordance with the provision of the oaths Act,1969 (Central Act 44 of 1969) on the Tuesday 16.06.2026

(எதிரி ஆஜர். எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர். அரசுதரப்பு வழக்கறிஞர் ஆஜர்)

முதல் விசாரணை

நான் தற்போது திரிகூடபுரத்தில் குடியிருந்து வருகிறேன். நான் டிரைவராக வேலை செய்து வருகிறேன். அசா.5 செய்யது அப்துல் காதர் என்பவரை தெரியாது. தற்போது என்னிடம் காட்டப்படும் பார்வை மகஜர் மற்றும் அத்தாட்சியில் உள்ள முதலாவது சாட்சி கையொப்பம் என்னுடையது தான். தேதி, மாதம் நினைவில் இல்லை. கடந்த 6 வருடங்களுக்கு முன்பு என்னுடைய சொந்த வேலையாக சொக்கம்பட்டி காவல்நிலையம் சென்ற போது போலிசார் கேட்டு கொண்டதால் கையொப்பம் செய்து கொடுத்தேன். பார்வை மகஜர் மற்றும் அத்தாட்சியில் உள்ள முதலாவது சாட்சி கையொப்பம் மட்டும் அசாஆ.3 மற்றும் அசாஆ 4 ஆக குறியிடு செய்யப்படுகிறது. இந்த வழக்கு சம்பவம் பற்றி எனக்கு எதுவும் தெரியாது. போலிசார் என்னை விசாரிக்கவில்லை.

<u>அரசு தரப்பில் சாட்சியை பிறழ்சாட்சியாக விசாரிக்க அனுமதி கோரப்பட்டு அனுமதி வழங்கப்பட்டு பிறழ்சாட்சியாக விசாரிக்கப்பட்டது.</u>

போலிசார் விசாரணையின் போது கடந்த 09.11.2019ம் தேதியன்று 12.45 மணிக்கு நானும், அசா.5 செய்யது அப்துல் காதர் என்பவரும் வழக்கின் சம்பவ இடம் அருகே பேசிக்கொண்டிருந்தபோது அங்கு வந்த சொக்கம் பட்டி காவல் ஆய்வாளர் சொக்கம்பட்டி காவல்நிலைய குற்ற எண் 311/2019 வழக்கின் சம்பவ இடத்தையும், அதன் சுற்றுப்புறத்தையும் பார்வையிட்டு பார்வை மகஜர், மாதிரிவரைபடம் தயார் செய்தார்கள் என்றும், அதில் நானும், செய்யது அப்துல் காதர் என்பவரும் சாட்சிகளாக கையொப்பம் செய்தோம் என்றால் சரியல்ல. பின்னர் சம்பவ இடத்திலிருந்து

வழக்கின் சொத்துக்களை எங்கள் முன்பாக 13.30 மணிக்கு அத்தாட்சி பிறப்பித்து கைப்பற்றினார் என்றால் சரியல்ல. மேற்படி விசயம் உண்மை என்றாலும் தற்போது ஆஜர் எதிரிக்கு பயந்து கொண்டு பொய்யாக சாட்சியாக அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை இல்லை.

Typed down to my dictation in my presence and hearing and under my personal direction and superintendence and interpreted to the witness in the presence of the accused and admitted by the witness to be correct.

//Sd//– Tmt.S.Muthulakshmi
Judicial Magistrate,
Tenkasi

JUDICIAL FORM NO.53
{See Rule-42}
DEPOSITION OF WITNESS
(CHATPTER XXIII CRPC).
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT, TENKASI.
Case No.சிசி.100/2020
PW.9

| பெயர் | ராசுக்குட்டி | தாலுகா | |
|---|---|---|---|
| தந்தை பெயர் | அந்தோணிராஜ் | தொழில் | முதல்நிலை காவலர் |
| கிராமம் | ஊட்டி | வயது | 36 |

Solemnly affirmed in accordance with the provision of the oaths Act,1969 (Central Act 44 of 1969) on the Tuesday 16.06.2026

(எதிரி ஆஜர். எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர். அரசு தரப்பு வழக்கறிஞர் ஆஜர்)

முதல் விசாரணை:–

நான் தற்போது கொலக்கொம்பை காவல்நிலையத்தில் முதல்நிலை காவலராக பணிபுரிந்து வருகிறேன். ஆஜர் எதிரியை எனக்கு தெரியும். அவர் என்னுடன் பட்டாளியனில் பணிபுரிந்தார். பட்டியல் சாட்சி 1 திவான் சாகிப் என்பவரை தெரியாது. அசா.1 திவான் மைதீன், அசா.2 செய்யது அப்துல் காதர் அசா.3. ரஸித்தாள் அசா.4 மைதீன் பாத்திமா, அசா.6 முகமது அப்துல் ஜாபர்,அசா.7 செய்யது பீவி, ஆகியோர்களை தெரியாது. அசா.8 காவலர் முத்து என்பவரை தெரியும். வழக்கில் இறந்து போன ஆயிஷா பானு, இர்பானா ஆசியா, கன்சால்மகரிபா ஆகியோர்களை தெரியாது. தேதி, மாதம் நினைவில் இல்லை. கடந்த 2019 ம் வருடம் காவலர்களுக்கு உணவுப்பொருட்கள் கொண்டு செல்லும் வாகனத்தில் நானும், ஓட்டுநரும் சென்று கொண்டிருந்தோம். பாதியில் என்னை போலிசார் இருந்த காவலர் வாகனத்தில் ஏற்றி விட்டார்கள். மாலை 4 மணியளவில் நான் பேருந்தில் ஏறினேன். பேருந்தில் ஏறியதும் தூங்கி விட்டேன். திடீரென சத்தம் கேட்டது. என் கை முழுவதும் இரத்தமாக இருந்தது. பேருந்தில் விபத்து ஏற்பட்டு பேருந்தின் கண்ணாடி என்னை குத்தி விட்டது. அன்றைய தினம் காவலர் பேருந்தை ஓட்டிய நபர் யார் என்று எனக்கு தெரியாது. நான் கீழே இறங்கி உட்கார்ந்து கொண்டேன். எனக்கு மயக்கம் வந்து விட்டது. பின்னர் ஆம்புலன்ஸ் மூலம் கடையநல்லூர் அரசு மருத்துவமனைக்கு அழைத்து சென்றார்கள். விபத்து எப்படி ஏற்பட்டது என்று நான் பேருந்தில் தூங்கியதால் எனக்கு தெரியாது. போலிசார் என்னை விசாரிக்கவில்லை.

அரசு தரப்பில் சாட்சியை பிறழ்சாட்சியாக விசாரிக்க அனுமதி கோரப்பட்டு அனுமதி வழங்கப்பட்டு பிறழ்சாட்சியாக விசாரிக்கப்பட்டது.

போலிசார் விசாரணையின் போது கடந்த 09.11.2019 ம் தேதியன்று காலை 11.00 மணியளவில் கொல்லம் முதல் திருமங்கலம் ரோட்டில் தெற்கிருந்து வடக்கு நோக்கி TN 84 G0012 என்ற பதிவெண் கொண்டபோலிஸ் பஸ்சை எதிரி அதிவேகமாகவும்,அஜாக்கிரதையாகவும், கவனக்குறைவாகவும் ஓட்டி திரிகூடபுரம் பஸ்ஸ்டாப் அருகே மேற்கு பக்கம் வேப்ப மரத்தடியில் பஸ்க்காக காத்து கொண்டிருந்த இந்த வழக்கில் இறந்து போன மூன்று பெண்களும் நின்று கொண்டிருந்த போது எதிரி போலிஸ் பஸ்சை கொண்டு மோதி விபத்தை ஏற்படுத்தினார் என்றால் சரியல்ல. விபத்தில் பேருந்துக்குள் இருந்த எனக்கும், அசா.8 முத்து என்பவருக்கும் காயம் ஏற்பட்டது என்றால் சரியல்ல. மேற்படி விசயம் உண்மை என்றாலும் தற்போது எதிரி காவலர் என்பதால் அவரை இவ்வழக்கிலிருந்து விடுவிக்க பொய்யாக சாட்சியாக அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை இல்லை.

Typed down to my dictation in my presence and hearing and under my personal direction and superintendence and interpreted to the witness in the presence of the accused and admitted by the witness to be correct.

//Sd//– Tmt.S.Muthulakshmi
Judicial Magistrate,
Tenkasi

JUDICIAL FORM NO.53
{See Rule-42}
DEPOSITION OF WITNESS
(CHATPTER XXIII CRPC).
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT, TENKASI.
Case No.சிசி.100/2020
PW.8

| | | | |
|---|---|---|---|
| பெயர் | முத்து | தாலுகா | உசிலம்பட்டி |
| தந்தை பெயர் | பண்டாரம் | தொழில் | முதல்நிலை காவலர் |
| கிராமம் | பண்ணியன் | வயது | 37 |

Solemnly affirmed in accordance with the provision of the oaths Act,1969 (Central Act 44 of 1969) on the Tuesday 16.06.2026

(எதிரி ஆஜர். எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர். அரசு தரப்பு வழக்கறிஞர் ஆஜர்)

முதல் விசாரணை:-

நான் தற்போது ஆர்10.எம்ஜிஆர் நகர் காவல்நிலையத்தில் முதல்நிலை காவலராக பணிபுரிந்து வருகிறேன். ஆஜர் எதிரியை எனக்கு தெரியும். அவர் என்னுடன் பட்டாளியனில் பணிபுரிந்தார். பட்டியல் சாட்சி 1 திவான் சாகிப் என்பவரை தெரியாது. அசா.1 திவான் மைதீன், அசா.2 செய்யது அப்துல் காதர் அசா.3. ரஸித்தாள் அசா.4 மைதீன் பாத்திமா, அசா.6 முகமது அப்துல் ஜாபர்,அசா.7 செய்யது பீவி ஆகியோர்களை தெரியாது. வழக்கில் இறந்து போன ஆயிஷா பானு, இர்பானா ஆசியா, கன்சால்மகரிபா ஆகியோர்களை தெரியாது. தேதி, மாதம் நினைவில் இல்லை. கடந்த 5,6 வருடங்களுக்கு முன்பு நான் ராஜபாளையம் சிறப்பு காவல்படையில்பணிபுரிந்த போது பணிக்காக காவலர் வாகனத்தில் 30,40 பேர் வந்து கொண்டிருந்த போது நான் பேருந்தில் தூங்கி விட்டேன். திடீரென சத்தம் கேட்டது நான் முழித்து பார்த்த போது என் கையெல்லாம் ரத்த காயமாக இருந்தது. என்னை ஆம்புலன்சில் பக்கத்தில் இருந்த அரசு மருத்துவமனைக்கு அழைத்து சென்றார்கள். அன்றைய தினம் பேருந்தை ஓட்டிய நபர் யார் என்று எனக்கு தெரியாது. பேருந்தில் மற்ற நபர்களுக்கு என்ன ஆனது என்று எனக்கு தெரியாது. போலிசார் என்னை விசாரிக்கவில்லை.

<u>அரசு தரப்பில் சாட்சியை பிறழ்சாட்சியாக விசாரிக்க அனுமதி கோரப்பட்டு அனுமதி வழங்கப்பட்டு பிறழ்சாட்சியாக விசாரிக்கப்பட்டது.</u>

போலிசார் விசாரணையின் போது கடந்த 09.11.2019 ம் தேதியன்று காலை 11.00 மணியளவில் கொல்லம் முதல் திருமங்கலம் ரோட்டில் தெற்கிருந்து வடக்கு நோக்கி TN 84 G0012 என்ற பதிவெண் கொண்டபோலிஸ் பஸ்சை எதிரி அதிவேகமாகவும்,அஜாக்கிரதையாகவும், கவனக்குறைவாகவும் ஓட்டி திரிகூடபுரம் பஸ்ஸ்டாப் அருகே மேற்கு பக்கம் வேப்ப மரத்தடியில் பஸ்க்காக காத்து கொண்டிருந்த இந்த வழக்கில் இறந்து போன மூன்று பெண்களும் நின்று கொண்டிருந்த போது எதிரி போலிஸ் பஸ்சை கொண்டு மோதி விபத்தை ஏற்படுத்தினார் என்றால் சரியல்ல. விபத்தில் பேருந்துக்குள் இருந்த எனக்கும், சாட்சி ராசுக்குட்டி என்பவருக்கும் காயம் ஏற்பட்டது என்றால் சரியல்ல. மேற்படி விசயம் உண்மை என்றாலும் தற்போது எதிரி காவலர் என்பதால் அவரை இவ்வழக்கிலிருந்து விடுவிக்க பொய்யாக சாட்சியாக அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை இல்லை.

Typed down to my dictation in my presence and hearing and under my personal direction and superintendence and interpreted to the witness in the presence of the accused and admitted by the witness to be correct.

//Sd//– Tmt.S.Muthulakshmi
Judicial Magistrate,
Tenkasi